## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.113/2012

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயபால் | மதம் | : இந்து |
| த/பெ | : முனுசாமி ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 84 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**27.03.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வீட்டுமனைகள் போட்டுள்ள இடம் எந்த புல எண்ணில் வருகிறது என்றால் புல எண்.218/5A ஆகும். நான் ராமசாமி முதலியாரிடமிருந்து வீட்டுமனையை வாங்கினேன் என்றால் சரிதான். புல எண்.218/5Aல் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் என் மனை 1485 சதுரடி ஆகும். புல எண்.218/5Aல் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் மொத்த விஸ்தீரணம் தெரியாது. புல எண்.218/5A ன் மொத்த விஸ்தீரணமே 53 செண்ட் என்றால் அது எனக்கு தெரியாது. ராமசாமி முதலியார் மொத்த விஸ்தீரணம் 53 செண்ட்டை வீட்டு மனைகளாக பிரித்து என்னை போல் பலருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் அனைத்து நபர்களுக்கும் விற்றார் என்பது தெரியும். அவர் எத்தனை வீட்டுமனைகள் போட்டார் என்பது எனக்கு தெரியாது. நான் அ.வ.எண்.123/12ஐ தாக்கல் செய்வதற்கு முன்பே வெங்கடேசன் என் மீது அ.வ.எண்.113/2012 தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம்.

2. ராமசாமி முதலியார் புல எண்.218/5A ல் மொத்தம் 66 செண்ட்டை கணக்கு காண்பித்து வீட்டு மனைகளாக பிரித்தார் என்றால் எனக்கு அது தெரியாது. வீட்டு மனை பிரித்து விற்றது மட்டும்தான் தெரியும். தாவா

சொத்திற்கும் புல எண்.218/5Aக்கும் இடையே 5–6 செண்ட் புறம்போக்கு மனை உள்ளதாக வெங்கடேசன் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு எனது வீட்டு மனை பற்றி மட்டும்தான் தெரியும். 53 செண்ட் மட்டும்தான் அந்த கிராமத்தாருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் ஆனால் ராமசாமி 13 செண்ட் அதிகமாக 66 செண்டிற்கு வீட்டு மனை பிரித்து விற்பனை செய்துள்ளார் என்றாலும் எனக்கு அது தெரியாது. வெங்கடேசன் சொத்திற்கும் புல எண்.218/5A பட்டா நிலத்திற்கும் இடையே 6 செண்ட் அனாதீனம் நிலம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அது ராமசாமியிடம்தான் கேட்க வேண்டும்.

3. ராமசாமிக்கு கிரையம் கொடுத்த நபர் இந்த வழக்கில் அவசிய தரப்பினர் என்று சொல்லியும் நான் சேர்க்காமல் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வெங்கடேசனின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.215/8A, 215/9A ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 10ல் புல எண்.218/5A ல் சாலை காட்டப்படவில்லை என்றால் நிலஅளவையர் அளந்து கொடுத்ததில் நீள வண்ணப்பகுதி எனக்கு சொந்தமானது என்றும் சிவப்பு வண்ண பகுதி அவருக்கு சொந்தமானது என்றும் அளந்து கொடுத்துள்ளார். நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறானது என வெங்கடேசன் ஆட்சேபணை தெரிவித்துள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது. புல எண்.215/8ல் பூரா விஸ்தீரணம் 22 செண்டில் 4 செண்ட்டை நீயே அனுபவித்து கொள்ள வேண்டியது என வெங்கடேசன் வா.சா.ஆ 11 கடிதம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது.

4. துரைசாமி மந்தடி மகன் கண்ணன் புல எண்.215/8ல் ஏற்கனவே 6 செண்ட்டை வேறு நபருக்கு விற்றுவிட்டார் என்றாலும் வெங்கடேசன் அப்பாவிற்கு 12 செண்டை விற்றுவிட்டார் என்றாலும் எனக்கு அது தெரியாது. புல எண்.215/8ல் துரைசாமி மந்தடி மகன் கண்ணன் தனது அனுபவத்தில் 22 செண்ட் இருந்தது என்றும் மீதி உள்ள 4 செண்ட்டை நீயே அனுபவித்து கொள்ள வேண்டியது என வா.சா.ஆ 11 கடிதம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. நான் வழக்கு சொத்தை எப்போது கிரையம்

வாங்கினேன் என்றால் 2002ல் வாங்கினேன். வா.சா.ஆ 11 கடிதம் 31.01.1983ம் தேதியிட்ட கடிதம் என்பது தெரியுமா என்றால் தெரியாது. மனை வாங்கும்போதே ராமசாமி எனது சொத்திற்கு நான்கு எல்லைகளை சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

5. வெங்கடேசனை சரிக்கட்ட நாங்களாக எழுதி கொண்ட கிரைய கடிதம் உள்ளிட்ட ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தான மனை எண்.134 தற்போது பூமியிலேயே இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து மனை எண்.134 என்று குறிப்பிட்டு நான் வாங்கியுள்ள இடம் வெங்கடேசன் அனுபவத்தில் 40 வருடங்களாக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து மனை எண்.134ல் எனக்கோ எனக்கு விற்ற ராமசாமி முதலியாருக்கோ அவருக்கு விற்றவருக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் அது என் சொத்துதான். வாதி வெங்கடேசன் தாக்கல் செய்த அ.வ.எண்.113/2012 தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் நான் தாக்கல் செய்த அ.வ.எண்.123/2012 தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)